**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட்., விழுப்புரம்**

**ஒப்பந்தப்புள்ளி படிவம்**

வேலையின் பெயர் - தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (வி) வது., விழுப்புரம்-க்கு சொந்தமான மாமண்டூர் சாலையோர உணவக வளாகத்திலுள்ள 1 உணவகம், 6 கடைகள், 2 எடை பார்க்கும் இயந்திரம் நிறுவ இடம் மற்றும் கட்டண முறையில் பயன்படுத்தும் 2 கழிவறைகள் ஆகியவை நடத்துவதற்கான உரிமம். உரிம காலம் - **33 மாதங்கள்.**

ஒப்பந்தப்புள்ளி சமர்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள் & நேரம்
20.04.2022 **அன்று மாலை 3.00 மணி வரை.**

ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் & நேரம்
20.04.2022 **அன்று மாலை 3.30 மணி.**

**முன் வைப்பு தொகை - ரூ.**2,50,000.00

**ஒப்பந்தப்புள்ளி படிவத்தின் விலை - ரூ.**590.00 **(திரும்ப தரப்படமாட்டாது)** (GST உட்பட)

**ஒப்பந்தப்புள்ளி படிவம் மாற்றத்தக்கதல்ல**

**மொத்த பக்கங்கள் -** 13 **மட்டும்.**



உரிமம் கோருபவர் கையொப்பம்

## தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட்., விழுப்புரம்

## ***இரட்டை உறை முறை - நிபந்தனைகள்.***

ஒப்பந்தப்புள்ளி படிவம் பெறுபவரது பெயர் மற்றும் முகவரி

திரு

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) வது., விழுப்புரம்-க்கு சொந்தமான மாமண்டூர் சாலையோர உணவக வளாகத்திலுள்ள 1 உணவகம், 6 கடைகள், 2 எடை பார்க்கும் இயந்திரம் நிறுவ இடம் மற்றும் கட்டண முறையில் பயன்படுத்தும் 2 கழிவறைகள் ஆகியவை நடத்துவதற்கான உரிமம்.

-:-

ஒப்பந்தம் கோருபவர்கள் ஒப்பந்தப் புள்ளிகள் சமர்பிக்கும் போது இரட்டை உறை முறையில் (Two Cover System) மூடி அரக்கு முத்திரையிட்டு சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

முதல் உறையில் (Techincal Cover) ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் கோரியவாறு முன் வைப்பு தொகைக்கான (EMD) வங்கி வரைவோலை (DD) மற்றும் கோரப்பட்டுள்ள அனைத்து தகுதிகளுக்கான சான்றுகளும் இணைக்கப்பட வேண்டும். உறையின் மேல் உறை எண்.1 (Techincal Cover) என குறிப்பிடப்பட வேண்டும். ஒப்பந்த உடன்படிக்கை நிபந்தனைகளின் அனைத்து பக்கங்களிலும் உரிமம் கோருபவர் கையொப்பம் இடவேண்டும்.

இரண்டாம் உறையில் உணவகம் விடுதி, கடைகள் மற்றும் தானியங்கி எடை பார்க்கும் இயந்திரம் இட உபயோக உரிமம் மற்றும் கட்டண முறையில் பயன்படுத்தும் 2 கழிவறைகளை பராமரிப்பதற்கான உரிமம் ஆகியவற்றிற்கு விலைப்புள்ளி கோரப்பட வேண்டும். உறையின் மேல் உறை எண்.2 (Commercial Cover) எனக் குறிப்பிடப்பட வேண்டும்.

இந்த இரண்டு உறைகளையும் தனித்தனியே மூடி அரக்கு முத்திரையிட்டு மூன்றாவதாக ஓர் உறையில் வைத்து மூடி அரக்கு முத்திரையிட்டு சமர்பிக்க வேண்டும். இது தவிர ஒப்பந்ததாரர் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள உடன்படிக்கை நிபந்தனைகள் முழுமையும் கவனமாக படிக்க வேண்டும்.

மேலும் முதல் உறையில் முன் வைப்பு தொகைக்கான வரைவோலை மற்றும் தேவையான சான்றிதழ்கள் இணைத்திருந்தால் மட்டுமே இரண்டாவது உறை திறக்கப்படும்.

ஒப்பந்தப்புள்ளி 20.04.2022 அன்று மாலை **3.00** மணி வரை விழுப்புரம் கூட்டாண்மை அலுவலகத்தில் பெறப்படும்.



உரிமம் கோருபவர் கையொப்பம்

## ***உணவகம் மற்றும் கடைகளுக்கான ஒப்பந்த உடன்படிக்கை நிபந்தனைகள்***

மாமண்டூர் சாலையோர உணவக வளாகத்திலுள்ள 1 உணவகம், 6 கடைகள், 2 எடை பார்க்கும் இயந்திரம் நிறுவ இடம் மற்றும் கட்டண முறையில் பயன்படுத்தும் 2 கழிவறைகள் ஆகியவை எந்த நிலையில் உள்ளதோ அவ்வாறே உபயோக உரிமத்திற்கு தரப்படும்.

### ஒப்பந்த உரிம நிபந்தனைகள்

1) உரிமம் 33 மாதங்களுக்கு (11+11+11 மாதங்கள்) மட்டுமே செல்லத்தக்கதாகும்.

2) முன் வைப்புத் தொகையாக (EMD) **ரூ.2,50,000.00** - (ரூபாய் இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) -க்கு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் பெறப்பட்ட கேட்பு வரைவோலை (Demand Draft) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்)வது., விழுப்புரம் என்ற பெயரில் ஒப்பந்த நமுனாவுடன் இணைக்கப்பட வேண்டும்.

3) அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தபுள்ளிகள் அதற்கான படிவத்தில் 20.04.2022 அன்று மாலை **3.00** மணி வரை தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்)வது., விழுப்புரம் கூட்டாண்மை அலுவலகத்தில் பெறப்படும்.

4) ஒப்பந்தத்தில் கோரப்படும் அதிகத் தொகையை ஒப்பிட்டு பார்க்கப்பட்டு எது அதிகமோ அதன் அடிப்படையில் உரிமதாரர் தேர்ந்தெடுக்கப்படுவர்.

5) உரிமம் கோருபவர் உணவகம், கடைகள் மற்றும் கழிவறைகளுக்கு **ரூ.1,00,00,000.00-** க்கு (ரூபாய் ஒரு கோடி) சொத்து மதிப்பு சான்றிதழ் நகல் ஒப்பந்தப்புள்ளியுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். உரிமம் கிடைக்கப் பெற்ற பின் சொத்து மதிப்பு சான்றிதழ் அசல் நகலை சமர்ப்பிக்க வேண்டும்.

6) மேலும் ஒப்பந்தப்புள்ளி கோருபவர் உணவகம் மற்றும் கடைகள் தொழில் தொடர்பாக குறைந்தது மூன்று வருட முன் அனுபவம் பெற்றிருத்தல் அவசியம். அதற்கான சான்று நகல் Government gazetted officer அவர்களின் சான்றொப்பம் பெற்று இணைக்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லை எனில் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும்.

7) மேலும் ஒப்பந்தப்புள்ளி கோருபவர் ஆண்டுக்கு வரவு செலவு குறைந்தது **100.00 லட்சத்திற்கு** குறையாமல் இருக்க வேண்டும். மேலும் அதற்கான சான்றுகளின் நகல் இணைக்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லை எனில் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும்.

8) Pan Card நகல் ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லை எனில் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும்.



உரிமம் கோருபவர் கையொப்பம்

9) ஒப்பந்ததாரர் தங்களது பதிவு செய்யப்பட்ட GST விபரத்தினை இணைக்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லை எனில் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும்.

10) ஒப்பந்தப்புள்ளிகள் அதற்கான படிவத்தில் மட்டுமே சமர்பிக்கப்பட வேண்டும். தபால், கூரியர் தாமதத்திற்கு நிர்வாகம் பொறுப்பல்ல.

11) முன் வைப்புத் தொகை இணைக்கப் பெறாத ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

12) எவ்வித காரணமும் காட்டாமல் எந்த ஒரு ஒப்பந்தப்புள்ளியையும் அல்லது அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளையும் நிராகரிப்பதற்கு மேலாண் இயக்குநர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் அவர்களுக்கு முழு அதிகாரமுண்டு.

13) தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்ததாரர் மூன்றாம் காலவரையில் (கடைசி 11 மாதங்களுக்கு) செலுத்தப்படும் 15% உயர்வு செய்யப்பட்ட மாத உரிம கட்டணத் தொகையில் 8 மாத தொகையை கணக்கீடு செய்து அதனை காப்புறுதி தொகையாக (Security Deposit) செலுத்துதல் வேண்டும். இதற்கு வட்டி ஏதும் தரப்படமாட்டாது. இத்தொகை செலுத்திய பின்னரே பணி ஆணை வழங்கப்படும்.

14) தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்ததாரர் கோரும் மாத உரிமக்கட்டணம் முதல் 11 மாதங்களுக்கு மட்டுமே. இரண்டாவது 11 மாதங்களுக்கு முதல் 11 மாதத்திற்கு செலுத்தப்படும் உரிம கட்டணத்துடன் 15% கூடுதலாக கணக்கிட்டு உரிமத்தை புதுப்பித்து மாத உரிமக் கட்டணம் செலுத்த வேண்டும். மேலும் மூன்றாவது 11 மாதங்களுக்கு இரண்டாவது 11 மாதத்திற்கு செலுத்தப்படும் உரிம கட்டணத்துடன் 15% கூடுதலாக கணக்கிட்டு உரிமத்தை புதுப்பித்து மாத உரிமக் கட்டணம் செலுத்த வேண்டும்.

15) மேற்படி 1 உணவகம், 6 கடைகள், 2 எடை பார்க்கும் இயந்திரம் நிறுவ இடம் மற்றும் கட்டண முறையில் பயன்படுத்தும் 2 கழிவறைகள் ஆகியவைகளுக்கு மட்டும்தான் உரிமம் வழங்கப்படும். அவ்வாறு உரிமம் வழங்கப்பட்டுள்ள இடத்தில்தான் 1 உணவகம், 6 கடைகள், 2 எடை பார்க்கும் இயந்திரம் நிறுவ இடம் மற்றும் கட்டண முறையில் பயன்படுத்தும் 2 கழிவறைகளை பராமரிக்க வேண்டும். இதை தவிர வேறு எந்த உபயோகத்திற்க்கும் மேற்படி இடத்தை பயன்படுத்தக் கூடாது.

16) மேலும், குறைந்த பட்சம் ரூ100.00-க்கான முத்திரைத்தாளில் உடன்படிக்கை பத்திரம் எழுதி சமர்பிக்கப்பட வேண்டும். மேற்படி நிபந்தனையை நிறைவேற்றுவதில் காலதாமதம் ஏற்பட்டால் உறுதி செய்யப்பட்ட உரிமம் ரத்து செய்யப்படும்.

17) இருதரப்பாலும் ஒப்புக் கொள்ளப்பட்ட உரிமக்கட்டணம் ஆங்கில மாதத்திற்கு கணக்கிடப்படும். ஒவ்வொரு மாத உரிமக் கட்டணமும் அடுத்த ஆங்கில மாதம் 10-ம் தேதிக்குள் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) வது.,



உரிமம் கோருபவர் கையொப்பம்

விழுப்புரம் {TNSTC(VPM)LTD} என்ற பெயரில் கேட்பு வரைவோலையாக (DEMAND DRAFT) செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். தவறினால் கட்டணம் செலுத்தவேண்டிய மாதத்தின் முதல் நாளிலிருந்து கட்டணம் செலுத்தப்படும் நாள் வரையிலான காலத்திற்கு உரிமக் கட்டணத்திற்கு **24%** சதவீத வட்டியும் சேர்த்து வசூலிக்கப்படும்.

18) மாத உரிமக் கட்டணத் தொகை அல்லாமல் மொத்த வளாகத்திற்கு கணக்கிடப்படும் தண்ணீர் கட்டணம், மின் கட்டணம், மின் பயனீட்டி அளவின்படி கணக்கிடப்பட்டு யூனிட் ஒன்றுக்கு ரூ.8.50 வீதம் அந்தந்த மாத உரிமக் கட்டணத்துடன் சேர்த்து செலுத்தப்பட வேண்டும். இதை தவிர மின் நுகர்வு தொகையுடன் 4 சதவீதம் வரி மற்றும் மீட்டர் சார்ஜ் ரூ 20.00 சேர்த்து செலுத்தப்பட வேண்டும். இந்தக் கட்டணம் தமிழ்நாடு மின்சார வாரியம் கட்டண விகிதத்திற்கு உட்பட்டு மாறுபடும். தவறினால் 24 சதவீத வட்டியும் சேர்த்து வசூலிக்கப்படும்.

19) மேற்கூறிய நிபந்தனை எண்.17 மற்றும் 18-க்கு விரோதமின்றி உரிமம் பெற்றவர் மாத உரிமக் கட்டணத் தொகை மற்றும் மின்சாரம், தண்ணீர் கட்டணம் இவைகளை இரண்டு மாத காலமாக தொடர்ந்து செலுத்த தவறினால் உணவகம், 6 கடைகள் மற்றும் கட்டண முறையில் பயன்படுத்தும் 2 கழிவறைகள் ஆகியவற்றிற்கான உபயோக உரிமம் ரத்து செய்யவும் மற்றும் காப்புறுதித் தொகைகளை பறிமுதல் செய்யவும் உரிமை இக்கழகத்திற்கு உண்டு.

20) உரிமம் பெற்றவர் நிறுவனத்தின் எழுத்து மூல அனுமதியின்றி கட்டிடத்தை அதிகப்படுத்தவோ எவ்வித மாற்றங்கள் செய்யவோ கூடாது. மீறினால் உரிமம் ரத்து செய்யப்படும்.

21) வழங்கப்படும் உரிமக்காலம் உணவகம், 6 கடைகள் மற்றும் 2 கழிவறைகள் ஆகியவை ஏற்றுக்கொண்ட தேதியிலிருந்து 33 மாதங்கள் மட்டும். கட்டிட உபயோக உரிமை மட்டும்தான் உரிமம் பெற்றவருக்கு கொடுக்கப்படும் மற்ற தேவைப்படும் வசதிகளை சொந்த செலவில் முன் அனுமதி பெற்று செய்து கொள்ள வேண்டும். மீறுபவர் மீது முன் அறிவிப்பின்றி கட்டிடம் உபயோகிக்கும் உரிமையை பறிமுதல் செய்யும் அதிகாரம் இக்கழகத்திற்கு உண்டு.

22) உரிமம் காலாவதியானவுடன் உணவகம், 6 கடைகள், 2 எடை பார்க்கும் இயந்திரம் நிறுவ இடம் மற்றும் கட்டண முறையில் பயன்படுத்தும் 2 கழிவறைகள் ஆகியவை காலி செய்து உரிமம் பெறும் காலத்தில் உள்ளது போல் நல்ல நிலையில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) வசம் ஒப்படைத்தல் வேண்டும். அவ்வாறு செய்யத்தவறினால் அவரால் செலுத்திய காப்புறுதித் தொகையிலிருந்து இக்கழகத்திற்கு ஏற்படும் நஷ்டங்களை பிடித்தம் செய்து கொள்ளப்படும்.



உரிமம் கோருபவர் கையொப்பம்

23) உணவகம், 6 கடைகள், 2 எடை பார்க்கும் இயந்திரம் நிறுவ இடம் மற்றும் கட்டண முறையில் பயன்படுத்தும் 2 கழிவறைகள் அதைச் சுற்றியுள்ள இடங்களை எப்பொழுதும் சுத்தமாகவும், சுகாதரத்துடன் பேணப்பட வேண்டியது உரிமம் பெற்றவரின் பொறுப்பாகும். அப்படி செய்ய தவறினால் இப்போக்குவரத்துக் கழகமே பணியினை மேற்கொண்டு அந்த செலவுத் தொகையினை உரிமம் பெற்றவரிடமிருந்து வசூல் செய்யப்படும் அல்லது உரிமம் பெற்றவர் செலுத்திலுள்ள காப்புறுதி தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும். மேலும் சுத்தம் செய்யும் பணியாளர்களைக் கொண்டு இரண்டு கழிவறைகளையும் 2 மணி நேர இடைவெளியில் பினாயில், பிளீச்சிங் பவுடர் தெளித்து சுத்தம் செய்ய வேண்டும். கழிவறையை பயன்படுத்தும் பயணியர்களிடம் ஒரு நபருக்கு ரூ.2.00 மட்டும் வசூலித்து உரிய ரசீது வழங்க வேண்டும்.

24) மாமண்டூர் உணவக வளாகத்தில் பேருந்து நிறுத்தும் நடை மேடை, கான்கிரீட் தரை, மண் தரை ஆகியவற்றை தினசரி பெருக்கி சுத்தம் செய்ய வேண்டும். வளாகத்தினுள் தேவையற்ற புல், செடி மற்றும் புதர்களை அவ்வப்போது அகற்றி சுத்தம் செய்ய வேண்டும். உணவகம், கடைகள் மற்றும் நடை மேடை ஆகியவற்றின் கூரைகள் மற்றும் சுவர்களில் தூசி, ஒட்டடை ஆகியவை இல்லாமல் அவ்வப்போது சுத்தம் செய்யப்படவேண்டும்.

25) கட்டிடங்களின் மேல் தளம் (மொட்டை மாடிகளை) பெருக்கி சுத்தம் செய்ய வேண்டும். மழைக் காலங்களில் அடைப்பு ஏதும் ஏற்படாமலும் மழை நீர் தேங்காமலும் நன்கு பராமரிக்கப்பட வேண்டும்.

26) வளாகத்தின் உள்ளே சேகரமாகும் குப்பை, மண் ஆகியவை ஒரு லாரி லோடு அளவுக்குச் சேர்ந்தவுடன் அவற்றை ஒப்பந்ததாரரது வாகனங்கள் மூலம் வளாகத்திலிருந்து போக்குவரத்து கழக பாதுகாவலர் அனுமதியுடன் அகற்றி வளாகத்துக்கு வெளியே நகராட்சி அனுமதிக்கும் இடத்தில் கொட்ட வேண்டும்.

27) வளாகத்திலுள்ள மழை நீர் வாய்க்கால்கள் மற்றும் கழிவு நீர் வாய்க்கால்கள் மற்றும் மழை நீர் குழாய்கள் ஆகியவற்றை தினமும் சுத்தம் செய்து பராமரிக்க வேண்டும். வளாகத்தின் மழைநீர் செல்லும் வாய்க்கால்களை வளாகத்தின் வெளியேயும் 500 மீட்டர் தூரத்துக்கு மிகைப்படாத தூரம் முழுமைக்கும் பராமரிக்க வேண்டும். மழைநீர் சேகரிப்பு தொட்டிகளையும் அவற்றின் குழாய் இணைப்புகளில் ஏற்படும் அடைப்புகளையும் நீக்கி சுத்தமாக பராமரிக்க வேண்டும்

28) உரிமம் பெறுபவர் உணவகம், 6 கடைகள், 2 எடை பார்க்கும் இயந்திரம் நிறுவ இடம் மற்றும் கட்டண முறையில் பயன்படுத்தும் 2 கழிவறைகள் அல்லது அதை சுற்றியுள்ள இடத்தை முழுவதுமோ அல்லது பகுதியையோ மறு உரிமத்திற்கு அல்லது உள் வாடகைக்கு விடவோ, வேறொரு பெயரில் மாற்றம் கொடுக்கவோ அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் உரிமதாரர் எந்த சந்தர்ப்பத்திலும் வேறு ஒருவரை கூட்டு வைத்து கொண்டு அனுமதிக்கப்பட மாட்டார்கள். வியாபாரம் தொடர்பாக அனைத்து இடங்களிலும் தங்கள் பெயரிலேயே அனைத்து நடவடிக்கைகளும் இருத்தல் வேண்டும். அதற்கு மாறாக ஏதும் நடந்துள்ளதாக நிர்வாகத்தினருக்கு தெரியும்பட்சத்தில் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமம் எந்தவித முன்னறிவுப்புமின்றி ரத்து செய்யப்படுவதுடன் அவர்கள் செலுத்தியுள்ள முழுத் தொகைகளையும் இழக்க நேரிடும்.



உரிமம் கோருபவர் கையொப்பம்

29) உணவகம், 6 கடைகள், 2 எடை பார்க்கும் இயந்திரம் நிறுவ இடம் மற்றும் கட்டண முறையில் பயன்படுத்தும் 2 கழிவறைகள் மற்றும் அதில் பொருத்தப்பட்டுள்ள கழகப் பொருட்கள் ஏதேனுக்கும் சேதம் ஏற்படின் அந்த சேதம் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தினரால் மதிப்பீடு செய்யப்பட்டு அந்த தொகை உரிமதாரரிடமிருந்து வசூல் செய்யப்படும். செலுத்தத்தவறினால் அவரது காப்புத் தொகையில் சரி செய்யப்படும். உரிமதாரரின் சொந்த உடமைக்கு ஏதேனும் சேதம் ஏற்படின் இப்போக்குவரத்துக் கழகம் எவ்விதத்திலும் பொறுப்பாகாது.

30) விற்பனை பொருட்கள் மற்றும் எடை பார்க்கும் இயந்திரம் வியாபாரம் பற்றிய குறைபாடுகள் குறித்து தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) மேலாண் இயக்குனர் (அல்லது) அவரது அனுமதி பெற்ற அதிகாரிகள் அவ்வப்போது கூறும் அறிவுரைகளை ஏற்று அதன்படி நடத்த வேண்டும். இப்போக்குவரத்துக் கழக அதிகாரிகள் எந்த நேரத்திலும் எவ்வித அறிவுப்புமின்றி பார்வையிட அனுமதியுண்டு.

31) உரிம காலத்தில் உரிமம் தொடர்பில் ஏதேனும் கூடுதல் வசதிகள் தேவைப்படின் இப்போக்குவரத்துக் கழகத்தின் முறையான அனுமதியுடன் அதனை உரிமதாரரின் சொந்தப் பொறுப்பிலேயே செயல்படுத்திக் கொள்ள வேண்டும்.

32) பயணிகளுடன் சுமூகமாக நடந்து கொள்ள வேண்டும். உரிம காலத்தில் சட்ட விரோதமான மற்றும் இப்போக்குவரத்துக் கழகத்தின் நற்பெயருக்கு ஊறு விளைவிக்கும் ஒழுக்கக் குறைவான மற்றும் முறைகேடான நிகழ்ச்சிகள் ஏதேனும் ஏற்படுமாயின் மற்றும் சட்ட விரோதமான வியாபாரம் மற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டாலும் உரிமத்தை ரத்து செய்யவோ, உரிமதாரரின் மீது நடவடிக்கை எடுக்கவோ தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) மேலாண் இயக்குநருக்கு முழு உரிமையுண்டு. மேலும், இது போன்ற சந்தர்ப்பங்களில் உரிமதாரரால் செலுத்தப்பட்ட காப்புறுதி தொகையும் பறிமுதல் செய்யப்படும்.

33) பேருந்தினுள் எவ்வித விற்பனையும் செய்யக்கூடாது.

34) எடை பார்க்கும் கருவி பழுதடைந்தால் உரிமதாரரே அவரது சொந்த செலவில் உடனடியாக பழுது பார்த்து கொள்ள வேண்டும்.

35) உரிமம் வழங்கப்பட்ட 15 தினங்களுக்குள் கழகத்தின் சொத்துக்களுக்கு நடைமுறை விதிகளின்படி ஏதேனும் ஒரு தேசிய காப்பீட்டுக் கழகத்தில் மூன்று வருட காலத்திற்கு இன்ஷ்யுரன்ஸ் செய்தமைக்கான செலுத்து சீட்டை இப்போக்குவரத்துக் கழகத்திற்கு உரிமம் பெற்றவர் அனுப்பி வைக்க வேண்டும். அவ்வாறு செலுத்துச் சீட்டை 15 தினங்களுக்குள்ளாக அனுப்பப்படவில்லை எனில்



உரிமம் கோருபவர் கையொப்பம்

அவரது உரிமத்தை காப்பீட்டு தொகை இழப்புடன் ரத்து செய்ய இப்போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநருக்கு உரிமையுண்டு.

36) உரிமம் பெற்றவர் வருங்கால வைப்பு நிதித் தொகை (மேற்படி வைப்பு நிதித் தொகை சட்டம் 1952-ன்படி) உணவகத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு வைப்பு நிதி பங்கு செலுத்த வேண்டும்.

37) உரிமம் பெற்றவர்கள் எதிர்பாராத சம்பவங்கள் ஏதும் ஏற்படாமல் தடுக்கும் பொருட்டு தீ தடுப்பு ஏற்பாடுகளை அவர்களின் சொந்த செலவில் செய்து கொள்ளல் வேண்டும். அதற்கு மாறாக அவர்களின் அஜாக்கிரதையினால் ஏதேனும் தீ விபத்துகள் ஏற்பட்டால் அதற்கான முழுப்பொறுப்பும் அவர்களையே சாரும். குறிப்பாக சாலைவழி உணவு விடுதி மற்றும் கடைகளில் ஏற்படும் எவ்வித விபத்திற்கும் மற்றும் அசம்பாவிதங்களுக்கும் உரிமம் பெற்றவரே முழுப்பொறுப்பாவார்.

38) உரிமம் சம்பந்தமான சட்டப் பிரச்சனைகள் மற்றும் வழக்குகள் யாவும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) தலைமை அலுவலகம் அமைந்துள்ள விழுப்புரம் நகர எல்லைக்குட்பட்ட நீதிமன்றங்களின் ஆளுகைக்கு மட்டுமே உட்பட்டதாகும்.

39) மாமண்டூர் உணவக வளாகத்தில் உள்ள கழகத்திற்கு சொந்தமான கிணறு மற்றும் ஆழ் குழாய் கிணறு வாயிலாக கிடைக்கும் தண்ணீரை மட்டும் உணவகம், கடைகள் மற்றும் கழிவறைகளுக்கு உபயோகித்துக் கொள்வதுடன் அன்றாடம் ஏற்படும் கழிவுநீர் மற்றும் கழிவுப் பொருட்களை அகற்றிட வேண்டும். மேலும் வளாகம், உணவகம் மற்றும் அனைத்து கடைகளையும் எப்பொழுதும் சுத்தமாக வைத்துக் கொள்வது உரிமம் பெற்றவரின் பொறுப்பாகும்.

40) இந்த உரிமம் சம்பந்தமாக எழக்கூடிய பிரச்சனையில் இப்போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநரின் தீர்ப்பே இறுதியானது.

41) மேலாண் இயக்குநர் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) அவர்களுக்கு எந்தவொரு உரிமத்தையும், ஒப்பந்தத்தையும் காரணம் ஏதும் தெரிவிக்காமல் நிராகரிக்க முழு உரிமை உண்டு. மேலும் உரிமம் அளிக்கப்பட்ட எப்பிரிவு ஒப்பந்தத்தையும் ரத்து செய்யவும் மேலாண் இயக்குநருக்கு முழு அதிகாரமுண்டு.

42) உரிமம் அளிப்பவரோ அல்லது உரிமம் பெறுபவரோ உரிம கால கெடுவிற்குள் மேற்படி 1 உணவகம், 6 கடைகள், 2 எடை பார்க்கும் இயந்திரம் நிறுவ இடம் மற்றும் கட்டண முறையில் பயன்படுத்தும் 2 கழிவறைகள் காலி செய்ய விரும்பினால் அவர்கள் மூன்று மாதத்திற்கு முன் நோட்டீஸ்ஸோ அல்லது அதற்கு பதிலாக மூன்று மாத உரிம கட்டணத்தையோ செலுத்தப்பட வேண்டும். மேற்படி நிபந்தனையினை உரிமம் பெறுபவரை பொருத்த மட்டில் உணவக கட்டிடத்தை மற்றும் கடைகளை முன்னதாக காலி செய்ய விரும்பினால் மேற்படி

நிபந்தனைக்குட்பட்டு கூடுதலாக மூன்று மாத உரிமக் கட்டணத்தை அபராதமாக செலுத்தப்பட வேண்டும். மேற்படி தொகையை செலுத்த தவறினால் அவரது கோரிக்கை ஏற்கலாகாது.

43) உணவகத்தில் தரமான உணவு வகைகள் மட்டும் தான் விற்பனை செய்யப்பட வேண்டும். அதைத் தவிர வேறு எந்தப் பொருட்களும் கட்டாயமாக விற்பனை செய்யக்கூடாது. உணவக வளாகத்தினுள் உணவு வகைகள் தவிர புகையிலை பொருட்களான பீடா,சிகரெட்.செய்திதாள் போன்ற யாதொரு பொருளும் விற்பனை செய்யக்கூடாது.

44) ஒப்பந்தம் கோருபவருக்கு வழங்கப்படும் ஒப்பந்த படிவங்கள் மாற்றம் செய்யத்தக்கதல்ல (Not transferable).

45) இப்போக்குவரத்துக் கழக கட்டிடங்கள் தமிழ்நாடு பொது இடங்கள் சட்டப்பிரிவு - 1, 1976 -க்கு உட்பட்டதாகும் (Tamil Nadu Public Premises Act of 1 of 1976) மேற்படி சட்டத்தின்படி நடவடிக்கைகள் மேற்கொள்ள இக்கழக பொது மேலாளருக்கு பூரண அதிகாரமுண்டு.

46) மத்திய, மாநில அரசு மற்றும் அரசு சார்பு நிறுவனங்களில் தவறிழைத்தோர் பட்டியலில் (Black List) ஏற்கனவே பெயர் இருந்து தடை செய்யப்பட்டிருப்பின் ஒப்பந்த உரிமம் கோர தகுதியற்றவராவர். ஒப்பந்த உரிமம் கோருபவர் மத்திய / மாநில அரசு மற்றும் அரசு சார்பு நிறுவனங்களில் அது போன்று தவறிழைத்தோர் பட்டியலில் தங்கள் பெயர் இல்லை என எழுத்து மூலமாக உறதியளிக்கப்பட வேண்டும். அவ்வாறு அளித்த உறுதியளிப்பு தவறென்று தெரிய வந்தால் காப்புத் தொகை மற்றும் முன் வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்பட்டு உரிமம் ரத்து செய்யப்படும்.

47) உரிமதாரர் மாத உரிம தொகைகளையும் மற்றும் மின்சாரம், தண்ணீர் கட்டணத் தொகையினை தொடர்ந்து இரண்டு மாத காலத்திற்கு செலுத்தாமலும் அல்லது உரிமம் காலாவதியான பின்பு உணவு விடுதியை மற்றும் கடைகளை ஒப்படைக்காமலும் இப்போக்குவரத்துக் கழகத்திற்கு இடையூறு கொடுக்கும் வகையில் நஷ்டம் ஏற்படுத்தும் வகையில் பூட்டி வைத்திருந்தாலும் மூன்று நாட்கள் அவகாச அறிக்கை கொடுத்து தகுந்த சாட்சியிகள் முன்னிலையில் இப்போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநரின் அதிகாரம் பெற்றவர் மேற்படி உணவகம் மற்றும் கடைகள் ஆகியவற்றின் பூட்டை திறந்து காலி செய்து மற்றவருக்கு உரிமம் விட மேலாண் இயக்குநருக்கு முழு அதிகாரமுண்டு. இதனால் உரிமம் ரத்தாவதுடன் முன் வைப்பு மற்றும் காப்புறுதி தொகைகள் பறிமுதல் செய்யப்படும்.

48) உரிமதாரர் உணவு பாதுகாப்பு பிரிவு அலுவலகம், உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் நிர்ணய சட்டம் 2006-ன் படி உணவு வணிகம் செய்வோருக்கான உரிமம் அல்லது பதிவு சான்று பெற்றிருத்தல் வேண்டும். மேலும், உரிம காலத்தின்போது



உரிமம் கோருபவர் கையொப்பம்

உணவு பாதுகாப்பு துறையின் அனைத்து சட்ட திட்டங்களுக்குட்பட்டு உணவகத்தினை நடத்திட வேண்டும்.

49) அனைத்து வகை பண்டங்களும் சுகாதார முறையில் தயாரித்து விற்பனை செய்தல் வேண்டும். உணவுப் பண்டங்களில் தரம் பற்றி இப்போக்குவரத்துக் கழகம் தெரிவிக்கும் கருத்தினை ஏற்று அதன்படி செயல்படுத்துதல் வேண்டும்.

50) உணவகம் மற்றும் கடைகளில் விற்பனை செய்யப்படும் உணவுப் பொருட்களின் விலைப்பட்டியல் மற்றும் கடைகளில் விற்பனை செய்யப்படும் பொருட்களின் விலைப்பட்டியல் இப்போக்குவரத்துக் கழகத்திற்கு முன்னதாக தெரிவித்து அனுமதி பெற்று, அனுமதியளிக்கப்பட்ட விலையில்தான் விற்பனை செய்யப்பட வேண்டும். அனுமதி அளிக்கப்பட்ட விலைப்பட்டியலை விட கூடுதலாக விற்பனை செய்வதாக தெரியும் பட்சத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட உரிமதாரரின் மீது நடவடிக்கை எடுக்கப்படும். இந்த விலைப் பட்டியல் உணவகம் மற்றும் கடைகள் முன் வைக்கப்பட வேண்டும்.

51) உணவகம் மற்றும் கடைகளில் எந்த பொருட்களின் விற்பனைக்காக உரிமம் அளிக்கப்பட்டதோ அவைகள் மட்டும்தான் விற்பனை செய்யப்பட வேண்டும். உதாரணமாக உரிமம் வழங்கப்படும் உணவு விடுதியில் உரிமம் அளிக்கப்பட்ட பொருட்களை தவிர பழங்கள், பீடா, சிகரெட் போன்ற யாதொரு பொருட்களும் கட்டாயமாக விற்பனை செய்யக்கூடாது. அதைபோல் கடைகளில் உரிமம் வழங்கப்பட்ட பொருட்கள் தவிர்த்து வேறு வகை பொருட்கள் கட்டாயமாக விற்பனை செய்யக்கூடாது.

52) உணவகம் மற்றும் கடைகளில் விற்பனை செய்யப்படும் பொருட்களின் விலை அருகாமையில் உள்ள இது போன்ற உணவக விலையைவிடவோ, நியாயமான விலையைவிடவோ கூடுதலாக இருத்தல் கூடாது. அப்படி கூடுதலாக விற்பனை செய்தால் உரிமம் ரத்து செய்யப்படும். அங்காடி விற்பனை பொருட்களின் விலை அருகாமையில் உள்ள இது போன்ற கடையின் விலையைவிடவோ நியாயமான விலையைவிடவோ, உற்பத்தியாளர்கள் நிர்ணயம் செய்யப்பட்ட அதிக பட்ச விற்பனை விலையை விடவோ (Maximum retail rates/prices fixed by the manufactures) கூடுதலாக இருக்கக்கூடாது. அப்படி கூடுதலாக விற்பனை செய்தால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

53) சாலைவழி உணவகம் மற்றும் கடைகள் நடத்துதல் குறித்து அரசு சம்பந்தப்பட்ட வரிகள் ஏதேனுமிருப்பின் அதனை உரிமம் பெற்றவர் செலுத்த வேண்டும். அரசு சம்பந்தப்பட்ட அனுமதியும் உரிமம் பெற்றவர்கள் சம்மந்தப்பட்ட துறையிடமிருந்து பெற வேண்டும்.

54) சாலைவழி உணவு விடுதி மற்றும் கடைகள் மற்றும் அதனைச் சுற்றியுள்ள இடங்களில் புகை படியக்கூடிய எரி பொருட்கள், விறகு போன்றவை கண்டிப்பாக



உரிமம் கோருபவர் கையொப்பம்

உபயோகப்படுத்தக்கூடாது. அப்படி செய்தால் உரிமம் ரத்து செய்யப்படுவதுடன் அதனால் ஏற்படும் செலவுகளை உரிமதாரரிடமிருந்து வசூல் செய்யப்படும்.

55) சமையல் செய்வதற்கு எரிவாயு மற்றும் எரி எண்ணெய் ஆகியவைதான் பயன்படுத்த வேண்டும். விறகுகள் கண்டிப்பாக பயன்படுத்தக்கூடாது. அவ்வாறு புகையேதும் படிந்தால் உரிமதாரர் அரவது சொந்த செலவில் அதனை சரி செய்ய வேண்டும். அப்படி செய்யத் தவறினால் அவரது உரிமம் ரத்து செய்யப்படுவதுடன் அதனால் ஏற்படும் செலவுகளை உரிமதாரரிடம் இருந்து வசூல் செய்யப்படும்.

56) மேற்படி உரிமம் சம்பந்தமாக உரிமம் பெற்றவர் குறிப்பிட்ட கட்டண உரிமத் தொகை இறுதி முடிவு நிர்வாகத்தால் எடுக்கும் வரையில் 3 மாத காலத்திற்கு செல்லுபடியாகும்.

57) எதிர்பாராத மின்சார தடை ஏற்பட்ட நாட்களுக்கும், புயல் மழை மற்றும் வேறு காரணங்களினால் வளாகம் செயல்பட முடியாத நாட்களில் பேருந்து ஏதும் வராத நாட்களில் வியாபாரம் செயல்பட முடியாத நாட்களில் அதற்காக யாதொரு நஷ்டஈடும் / ஒரு பகுதிக்கு தள்ளுபடியோ இப்போக்குவரத்துக் கழகத்திடம் கோர உரிமையில்லை.

58) உணவகம் மற்றும் கடைகள் நடத்துதல் குறித்து அரசு சம்மந்தப்பட்ட வரிகள் ஏதேனும் இருப்பின் அதனை உரிமதாரர் செலுத்துதல் வேண்டும். அவ்வாறு செலுத்தப்படவில்லை எனில் தகுந்த நடவடிக்கை எடுக்க இப்போக்குவரத்து கழகத்திற்கு முழு உரிமையுண்டு. மேலும் உரிமக் கட்டணத்துடன் **GST 18%** சேர்த்து மாதந்தோறும் செலுத்துதல் வேண்டும். இந்த கட்டணம் அரசு நிர்ணயம் செய்வதற்கு ஏற்ப அவ்வப்போது மாறுபடும்.

59) உணவகத்தில் உணவு பண்டங்கள் மற்றும் கடைகளில் விற்பனை பொருட்கள் தரமானதாகவும், நியாயமான விலையிலும் விற்பனை செய்தல் வேண்டும். விற்பனை செய்யப்படும் உணவு பண்டங்களின் விலையினை முன்னரே தெரிவித்து அனுமதி பெற்ற பின்புதான் விற்பனை செய்யப்பட வேண்டும். அவ்வாறு செய்ய தவறினால் அபராதம் விதிக்கப்படும். உணவுப் பண்டங்களின் தரத்தை இப்போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநரோ (அ) அவரது அதிகாரம் பெற்ற அலுவலர்களோ எந்தவித முன்னறிவிப்பின்றி ஆய்வு செய்ய அனுமதி உண்டு. ஆய்வின் போது உணவு பண்டங்களின் தரம் குறைவாகவோ / மோசமாகவோ இருந்தால் அவர்களின் அறிக்கையில் கூறும் பரிந்துரையின்படி அபராதம் விதிக்கப்படும். அவ்வாறு விதிக்கப்பட்ட அபராதத் தொகையை 7 நாட்களுக்குள் செலுத்துதல் வேண்டும். அபராதம் செலுத்திய பின் தரத்தின் நிலையினை உயர்த்தாமல் இருப்பின் உரிமம் பெற்றவரின் உரிமத்தை மறு அறிவிப்பு ஏதும் இன்றி முன்வைப்பு மற்றம் காப்புறுதி தொகை இழப்புடன் ரத்து செய்ய மேலாண் இயக்குநருக்கு முழு அதிகாரம் உண்டு. மேலும் உணவுப்பொருட்களின் தரம் சம்பந்தமாக பிரச்சனையில் மேலாண் இயக்குநரின் தீர்ப்பே இறுதியானது.

60) மாமண்டூர் உணவக வளாகத்தில் உணவகம், 6 கடைகள், 2 எடை பார்க்கும் இயந்திரம் நிறுவ இடம் மற்றும் கட்டண முறையில் பயன்படுத்தும் 2 கழிவறைகள் ஆகியவை நடத்திட கட்டிட அளவுகளின்படி உள்ள இடத்தினை மட்டும்தான் உபயோகப்படுத்திக் கொள்ளல் வேண்டும். குறிப்பிட்டுள்ள பகுதி அல்லாமல் கூடுதலாக இடத்தில் பொருட்கள் போன்றவைகள் வைத்திருத்தல், மேற்கூறை தற்காலிக பந்தல் போன்ற விஸ்தரிப்பு ஏதும் மேற்கொள்ளுதல் கூடாது. மேற்சொன்னவாறு கூடுதலாக இடத்தினை ஆக்கிரமிப்பு செய்யும் பட்சத்தில் அபராதம் விதிக்கவும், வைப்பு தொகையை கையகப்படுத்தவும் மற்றும் உரிமதாரரின் உரிமத்தை ரத்து செய்வது உட்பட்ட எந்தவித நடவடிக்கை எடுக்கவும் இப்போக்குவரத்துக் கழகத்திற்கு முழு அதிகாரமுண்டு. அபராதம் விதிக்கப்பட்ட பின்பும் ஆக்கிரமிப்பு தொடர்ந்தால் வழங்கப்பட்ட உரிமம், முன் வைப்பு மற்றும் காப்புறுதி தொகை இழப்புடன் ரத்து செய்ய இப்போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநருக்கு முழு அதிகாரமுண்டு.

61) மேற்படி மாமண்டுர் உணவக வளாகத்தில் ஒரு நாளைக்கு 250 பேருந்துகளுக்கு குறையாமல் சிற்றுண்டிக்காக நின்று செல்லும்.

62) மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளின் ஒன்றையோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நிபந்தனைகனையோ மீறினால் உரிமம் ரத்து செய்யப்படுவதுடன் மறு உரிமத்திற்கு விடவும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) மேலாண் இயக்குநருக்கு முழு உரிமை உண்டு.

63) மேற்கூறிய நிபந்தனைகளை எற்று கொண்டதற்கு அடையாளமாக இந்த படிவத்தில் கையொப்பமிட்டு உரிய நமுனாவுடன் இணைத்து சமர்பிக்க வேண்டும்.



உரிமம் கோருபவர் கையொப்பம்

## ***உறுதி மொழி***

அனுப்புனர் :

பெறுநர் :

மேலாண் இயக்குனர் அவர்கள்,
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிட்,
விழுப்புரம்.

அய்யா,

பொருள் : மாமண்டூர் சாலைவழி உணவக வளாகம் - 1 உணவகம், 6 கடைகள், 2 எடை பார்க்கும் இயந்திரம் நிறுவ இடம் மற்றும் கட்டண முறையில் பயன்படுத்தும் 2 கழிவறைகள் ஆகியவை நடத்துவதற்கான உரிமம் கோருவது - தவறிழைத்தோர் பட்டியலில் பெயர் இல்லை என உறுதியளிப்பது - குறித்து.

பார்வை : ஒப்பந்த அறிவிப்பு.

-----------

மாமண்டூரில் உள்ள தங்களது போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான சாலைவழி உணவக வளாகத்திலுள்ள 1 உணவகம், 6 கடைகள், 2 எடை பார்க்கும் இயந்திரம் நிறுவ இடம் மற்றும் கட்டண முறையில் பயன்படுத்தும் 2 கழிவறைகள் ஆகியவை நடத்துவதற்கான உரிமம் கோர விழைகிறேன். இதன் சம்பந்தமாக பின்வரும் உறுதி மொழியினை இதன் மூலம் தெரிவிக்கிறேன்.

## உறுதி மொழி (Declaration)

எனது பெயரோ அல்லது எனது நிறுவனத்தின் பெயரோ மத்திய மாநில அரசு மற்றும் அரசு சார்பு நிறுவனங்களில் தவறிழைத்தோர் பட்டியலில் (Black List) இதற்கு முன்பு தடை செய்து உத்திரவு வழங்கப்படவில்லை என இதன் மூலம் உறுதியளிக்கிறேன். மேற்சொன்ன அரசு நிறுவனங்களில் அதுபோன்ற தவறிழைத்தோர் பட்டியலில் எனது பெயரோ (அ) எனது நிறவனத்தின் பெயரோ இருப்பதாக தெரியும் பட்சத்தில் தங்கள் நிறுவனம் எடுக்கும் நடவடிக்கைகள் அனைத்திற்கும் கட்டுப்படுவேன் என இதன் மூலம் உறுதியளிக்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள

நாள் :

இடம் : உரிமம் கோருபவர் கையொப்பம்